**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081676
Cr. No. 03/2022/AC/VP

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு : 2022 FIR No.: மு.த.அ. எண் : Date: நாள் : 30.03.22

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 as Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: amended (Amendment) Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act 2018.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 30.03.22 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 14.45 — Time to : நேரம் வரை 17.30 Hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.03.22 — Time : நேரம் 20.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — அரசூர் நான்கு முனை சந்திப்பு சுமார் 15 கி.மீ தெற்கு.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — P. ஜெகதீஸ்வரன் — (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர் பெயர்~~ — V. பழனிச்சாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் — இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி. — (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) R. கலைமோகன், S/o. ராஜகோபால், உதவி செயற் பொறியாளர், ஆதிதிராவிட நல இயக்குநரகம், சென்னை.
(2) திரு. S. சரவணகுமார், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் (தற்காலிக பணிநீக்கம்) திருச்சி.
(3) திரு. A. மணி, ஓட்டுநர், ஆதிதிராவிட நல அலுவலகம், திருச்சி.
(4) திரு. S. செந்தில் குமார், காப்பாளர், ஆதிதிராவிட அம்பேத்கார் கல்லூரி மாணவர் விடுதி, திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 30.03.2022 ந்தேதி 20.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திரு.ப,ஜெகதீஸ்வான், ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர். என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், திரு. ப.ஜெகதீஸ்வரன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர். பெறுநர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.ந.க.எண்:அ/211/2022, நாள்:30.03.2022 அய்யா, பொருள் : திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - அரசூர் பைபாஸ் ரோட்டில் - 30.03.2022 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களுடன் திரு.சரவணக்குமார், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர், திருச்சி என்பவரின் TN 81 W 8848 Suzuki Baleno காரை திடீர் ஆய்வு செய்தது - புகார் கொடுத்தல் - தொடர்பாக. பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:30.03.2022. 30.03.2022ஆம் தேதி, 12.00 மணிக்கு கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரான திரு.ஜெகதீஷ்வரன் ஆகிய நான் அலுவலக பணியில் இருந்தபோது திரு.S.சரவணகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், திருச்சி என்பவர் திருச்சி ஆதிதிராவிடர் மாணவர் நல விடுதிகளுக்கு சமையலர் பணி நியமனம் செய்ததில் சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரியும்

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30/3/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.03.2022.

Name: பெயர் N. தேவநாதன்,
Rank: நிலை ..................No. எண்..........
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
ஊ.த.க.பிரிவு
விழுப்புரம்.

திரு.கலைமோகன் என்வரின் அறிவுரையின் பேரில் பணிநியமனம் செய்வதற்காக லட்சகணக்கில் பெறப்பட்ட லஞ்சப்பணத்தை திரு.கலைமணி என்பவரிடம் கொடுக்க TN 81 W 8848 Suzuki Baleno காரில் திருச்சியில் இருந்து விழுப்புரம் ஆதிதிராவிடர் நல அலுவலகத்தற்கு வந்து அதன் பிறகு சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகத்திற்கு கொண்டு செல்வதாக எனக்கு வந்த நம்கமான தகவலின் பேரில் நான் எனது அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து தங்களிடம் திரு.சரவணகுமார் அவர்களின் காரை விழுப்புரத்தில் வழிமறித்து ஆய்வு மேற்கொள்வது சம்மந்தமாக கலந்தாலோசித்தேன். பின்பு நான், தாங்கள் மற்றும் காவல் குழுவினருடன் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சுமார் 13.00 மணிக்கு புறப்பட்டு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள விழுப்புரம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்திற்கு சென்று கண்காணித்துக் கொண்டிருந்தபோது, மேற்படி DADWO சரவணகுமார் விழுப்புரம் வராமல் நேரடியாக சென்னை செல்வதாக தகவல் கிடத்தது. அதன் பேரில் நான், தங்களுடன் காவல் குழுவினரை அழைத்துக்கொண்டு சுமார் 13.30 மணியளவில் அரசூர் நான்கு முனை சந்திப்பில் மேற்படி வாகனத்தின் வருகைக்காக காவல் குழுவினருடன் காத்திருந்தோம். அப்போது சுமார் 14.00 மணியளவில் விழுப்புரம் நோக்கி வந்த TN 81 W 8848 Suzuki Baleno காரை காவல் குழுவினர் உதவியுடன் வழிமறித்து நிறுத்தினேன். பின்பு காரில் காரின் டிரைவர் இருக்கைக்கு இடதுபுறத்தில் இருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் S.சரவணகுமார் என்றும் தான் திருச்சி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலராக பணிபுரிந்து வருவதாக கூறினார். தான் சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகத்தற்கு செல்வதாகவும் தெரிவித்தார். பின்பு காரின் பின்புற இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் ஆ.மணி என்றும் திருச்சி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும் அதன் பிறகு காரை ஓட்டிவந்த ஓட்டுநரை விசாரிக்க அவர் தனது பெயர் ஆணந்தகிருஷ்ணன் என்றும் திருச்சி மன்னார்புரத்தில் வசித்து வருவதாகவும், சரவணகுமார் சென்னை செல்வதற்காக என்னை தினக் கூலிக்கு ஓட்டுநராக அழைத்தால் மேற்படி காரை ஓட்டி வந்ததாகவும் கூறினார். பின்பு நான் S.சரவணகுமார் அவர்களிடம் எனக்கு கிடைத்த நம்பகமான தகவலை தெரிவித்து காரை சோதனை செய்யப்போகும் விபரத்தை தெரிவித்தேன். அப்போது அவர் சோதனைக்கு முழு ஒத்துழைப்புதருவதாக கூறினார் பின்பு காரை உள்ளே சோதனை செய்தபோது அங்கு எந்தவித தொகையும் இல்லை பின்பு காரின் டிக்கியை திறக்க சொல்ல சரவணகுமார் டிக்கியை திறந்தார். மேற்படி டிக்கியை சோதனை செய்தபோது டிக்கியில ஒரு மணப்பாறை மஹாராஜா பட்டு சாரீஸ் & ரெடிமேட்ஸ் என்று எழுதப்பட்ட வெள்ளை மற்றும் ரோஸ்கலர் கட்டபை ஒன்று இருந்தது அந்த கட்டப்பையை சோதனை செய்தபோது அதில் கட்டுக்கட்டாக 500 ரூபாய் நோட்டுகள் இருந்தன. அதனுள்ளே தங்கள் வருகைக்கும் வாழ்த்துக்கும் நன்றி தங்கள் அன்புடன் M.ஆறுமுகம் Ex Army, A. செல்லம்மாள், M.A.அஜீத்குமார் M.C.A., பாதிரிப்பட்டி செல். 97880 68954 என்று எழுதப்பட்டவெளிர் மஞ்சள் நிற திருமண தாம்பூல பை ஒன்று இருந்தது. அதை திறந்து பார்க்க அதில் கட்டுக்கட்டாக 500 ரூபாய் நோட்டுகள் இருந்தன. மேற்படி பணம் குறித்து திரு.சரவணகுமார் அவர்களிடம் கேட்டபோது அவர் மேற்படி பணம் ஆதிதிராவிடர் மாணவர் நல விடுதிகளுக்கு சமையலர் பணி நியமனம் செய்ததில் சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் திரு.கலைமோகன் என்வரின் அறிவுரையின் பேரில் ஓட்டுநர்

திரு.A.மணி மற்றும் அம்பேத்கார் திருச்சி, சுப்ரமணியபுரம், கல்லூரி மாணவர் விடுதி காப்பளார் திரு.செந்தில் ஆகியோர் உதவியுடன் பணிநியமனம் பெற்ற சமையலர்களிடம் இருந்து லஞ்சமாக பெறப்பட்ட ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து எழுபத்தைந்தாயிரத்தை சென்னை ஆதிதிராவிட நல இயக்குநரகத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.கலைமோகன் என்பவரிடம் கொடுக்க எடுத்து செல்வதாக தெரிவித்தார். மேற்படி பணம் லஞ்சப்பணம் என தெரியவந்ததாலும், நாங்கள் காரை மறித்த இடம் பைபாஸ் சாலை என்பதாலும் அங்கு பொதுமக்கள் அதிகம் கூடியதாலும் மேற்படி இடத்தில் விசாரிப்பதற்கும், மகசர் தயார் செய்வதற்கும் போதிய வசதி இல்லாததால் அங்கிருந்து மேற்படி காருடன் அந்த காரில் வந்த சரவணகுமார் மற்றும் அவருடன் வந்த இரு நபர்கள் மற்றும் பணத்துடன், அங்கிருந்து புறப்பட்டு அருகில் உள்ள தொடர்புடைய அரசு அலவலகமான விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவகத்தின் முதல் தளத்தில் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்திற்கு சுமார் 14.40 மணிக்கு வந்து இவ்வலுவலக மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் இல்லாததால், அவருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்து உடனே அலுவலகம் வருமாறு தெரிவித்தேன். அதன் பின்பு அலுவலகத்தில் இருந்த கண்காணிப்பாளர் நாகமணி என்பவரிடம் விபரத்தை கூறி மகசர் தயார் செய்வதறக்காக மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் அறைக்கு அழைத்து வந்தோம். பின்பு மேற்படி கட்டப்பை மற்றும் வெளிர் மஞ்சள் நிற பையில் இருந்த பணத்தை எடுத்து மேற்படி சரவணக்குமார் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 2000X22 =44,000/- 500 X 7612 = 38,06,000/-, 200 X 5 =1000/- 100 X 240 = 24,000/- ஆக மொத்தம் ரூபாய் 38,75,000/- (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) இருந்தது. மேற்படி தொகை லஞ்சபணம் என விசாரணையில் தெரியவந்ததால் மேல் விசாரணைக்காக மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. பின்பு மேற்படி லஞ்சப்பணம் தொடர்பாக திரு.சரவணக்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் அவர்களை விசாரித்தபோது தான் திருச்சி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பணிபுரிந்தபோது சமையலர் பணி நியமனம் செய்ததில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களிடம் வாங்கிய லஞ்சத்தொகை உடனடியாக கலைமோகனிடம் கொடுக்காதது சம்மந்தமாக ஏற்றபட்ட பிரச்சனையின் காரணமாக 25.03.2022ந்தேதி முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதாகவும், பணிநீக்கத்தை சரி செய்ய வேண்டுமென்றால் உடனடியாக லஞ்சத்தொகையை கொண்டுவந்து கொடுக்கும்படி கலைமோகன் ஓட்டுநர் மணியிடம் தெரிவித்ததால் சமையலர்களிடம் இருந்து பெற்ற லஞ்சத்தொகையோடு தனது சொந்த பணத்தையும் சேர்த்து ரூபாய் 38,75,000/-த்தை கலைமோகனிடம் கொடுப்பதற்காக ஓட்டுநர் மணி என்பவருடன் சென்னை சென்றதாக தெரிவித்தார். பின்பு திரு.ஆ.மணி, ஓட்டுநர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம், திருச்சி என்பவரை விசாரிக்க அவரும் கலைமோகன் அறிவுரைப்படி சமையலர் பணி நியமனம் செய்ததில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களிடம் தானும், திருச்சி, சுப்ரமணியபுரம், கல்லூரி மாணவர் விடுதி காப்பளார் திரு.செந்தில் ஆகியோர் திருச்சி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலராக பணிபுரிந்த திரு.சரவணகுமார் அவர்களிடம் வாங்கி கொடுத்ததாகவும், மேற்படி லஞ்சத்தொகை பிரச்சனை சம்மந்தமாக சரவணகுமாரை தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதால், தற்காலிக பணிநீக்கத்தை சரிசெய்வதற்காக மேற்படி லஞ்சத்தொகையை உடனடியாக கொண்டு வந்து கொடுக்குமாறு என்னிடம் கலைமோகன் தெரிவித்ததை நான் சரவணகுமார் அவர்களிடம் தெரிவித்ததாகவும், அதன்படி தானும் சரவணகுமார் அவர்களும் சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் கலைமோகன் என்பவரிடம் லஞ்சபணத்தை கொடுப்பதற்காக சென்னை செல்வதாக தெரிவித்தார். மேலும், காரை ஓட்டிவந்த

தனிநபர் திரு.ஆணந்தகிருஷ்ணன் தான் தினக்கூலிக்கு ஒட்டுநர் பணி செய்யவந்ததாக தெரிவித்தார். பின்பு, இந்த நிகழ்வுகள் அனைத்தும் விழுப்புரம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திரு.நாகமணி முன்னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுகள் சம்மந்தமாக நான்கு நபர்களிடமும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி நிகழ்வுகள் தொடர்பாக கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டது. மேலும், திடீராய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை லஞ்சத்தொகைதான் என்பது எனது விசாரணையில் தெரியவருவதால் மேற்படி சம்பவத்தில் தொடர்புடைய நபர்களான 1.திரு.R.கலைமோகன். உதவி செயற்பொறியாளர், ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகம், 2. திரு.S.சரவணகுமார் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் (தற்காலிக பணி நீக்கம்), திருச்சி, 3. திரு.A.மணி, ஒட்டுநர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், திருச்சி மற்றும் 4. திரு.செந்தில், காப்பளார், அம்பேத்கர் கல்லூரி மாணவர் விடுதி, சுப்ரமணியபுரம், திருச்சி ஆகிய அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, (XXXX) ஒப்பம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர். <u>இணைப்பு</u> 1.ரொக்கம் 38,75,000/- (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) 2.நான்கு நபர்களின் வாக்குமூலங்கள்.3.கைப்பற்றுதல் மகசர்.

Sir

Received the complainant and registered the same in Viluppuram V&AC, Cr.No.03/2022 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in P.C (Amendment) Act 2018 on 30.03.2022 at 21.00hrs (sd) N.Devanathan, 30.03.2022, V&AC, Viluppuram.

இதன் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், வழக்கின் சொத்தையும் இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

(ந.தேவநாதன்)<br>
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,<br>
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,<br>
விழுப்புரம்.